# 21

# இடிமுழக்கக் குளம்பொலிகள்

## [6:1–8]

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் உருவகமும் சொல்லாக்கமும் மேற்கு உலகத்தின் சொல்லாடலின் பாகமாகியுள்ளன. உதாரணத்திற்கு, "இறைவெளிப்பாடு" என்ற வார்த்தையைப் பற்றி நினைத்துப் பாருங்கள். ''மாபெரும் அல்லது முழுமையான பேரழிவு''[1] என்பது பிரபலமான விளக்கமாக உள்ளது, மற்றும் பகட்டான சொல்லணிச் சிறப்பைக் கொண்ட செய்தித்தாள்கள் இந்த வார்த்தையை அந்தக் கருத்திலேயே தங்களின் தலைப்புச் செய்திகளில் பயன்படுத்துகின்றன. அழிவின் தீர்க்கதரிசிகள் உலகத்தின் முடிவைப் பற்றி முன்னுரைக்கையில் "இறைவெளிப்பாடு" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர்.

"அர்மகெதோன்" என்பது அடிக்கடி கேட்கப்படக் கூடிய இன்னொரு வார்த்தையாக உள்ளது, இது "வானவியல் கலகம்" அல்லது "நன்மை மற்றும் தீமை ஆகியவற்றின் சக்திகளுக்கு இடையிலான கடைசி யுத்தம்" என்றுகூட நினைக்கப்படுகிறது. அணு உட்கரு யுத்த வியூகம் பற்றிய புத்தகம் ஒன்று *The Wizards of Armageddon* என்று அழைக்கப்பட்டது. "Millennium" என்ற இன்னொரு வார்த்தைகூட வெளிப்படுத்தின விசேஷத்தில் இருந்து எடுத்துரைக்கப்படுவதாக உள்ளது, இது ''ஆயிரம் ஆண்டுகள்'' என்று அர்த்தப்படுகிறது. இந்த வார்த்தையானது இருபத்தியோராம் நூற்றாண்டை நெருங்கிய வேளையில் பொதுவான பயன்பாட்டில் இருந்தது. இந்தச் சொற்றொடர் அடிக்கடி பாவம்நிறைந்த மிகைக்கூற்றுக்களை உரித்தாக்கிற்று.

வெளிப்படுத்தின விசேஷம் 6ல் உள்ள நான்கு குதிரை வீரர்கள் என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில் நன்கு அறியப்பட்ட அடையாளங்களில் ஒன்றாக உள்ளது. உலகத்தின் சுய அழிவுமிகுந்த நடைபாவனைகளைப் பற்றி எச்சரிப்பதற்கு, பில்லி கிரஹாம் என்பவர் ஒரு புத்தகத்தை எழுதியபோது, அதை அவர் "*Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse*" ["அணுகும் குளம்பொலிகள்: இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்கள்''] என்று அழைத்தார். வின்சென்ட் பிளாஸ்கோ - இபெனெஸ் என்பவரின் புகழ்பெற்ற, யுத்தத்திற்கு எதிரான நாவல் (பிற்பாடு திரைப்படம்), *The Four Horsemen of the Apocalypse* [இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்கள்] என்று தலைப்பிடப்பட்டது. இப்படிப்பட்ட பணிகள், நான்கு குதிரை வீரர்களைப் பற்றிய தவறான புரிந்துகொள்ளுதலைப் பிரதிபலிக்கிறது, ஆனால் இவைகள், இந்த உருவகம் இன்னமும் நவீனமான சிந்தைகளில் பேசுகிறது என்ற உண்மையை

விவரிக்கிறது. புரூஸ் மெட்ஸெஜெர் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> வெளிப்படுத்தின விசேஷத்தின் சில அதிகாரங்கள் நமது காலத்தைப் பற்றி நேரடியாகப் பேசுகின்றன ... புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் நாம், இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களில் உலகில் பவனிவருவது பற்றி வாசிக்கின்றோம் மற்றும் கேட்கின்றோம்.[2]

இந்தப் பாடத்தில் நாம், யோவானின் நாட்களில் இந்த நான்கு குதிரை வீரர்களின் சாத்தியமான அர்த்தங்கள் பற்றி ஆராய விரும்புகின்றோம். அடுத்த பாடத்தில் நாம், இந்தப் பவனியாளர்கள் நமது நாட்களில் ஏதேனும் முக்கியக் கருத்தைக் கொண்டுள்ளனரா என்பது பற்றிக் கலந்துரையாடுவோம்.

## எதிர்பார்ப்பு

அரியணையில் வீற்றிருப்பவரிடத்தில் இருந்து முத்திரையிடப்பட்ட புத்தகத்தை ஆட்டுக்குட்டியானவர் வாங்கிக்கொள்ளுதல் என்பதே அதிகாரம் 5ல் முக்கியத்துவப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தது (5:7). 6:1ல் யோவான், ‘‘ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று[3] என்னை நோக்கி: நீ வந்து பார்[4] என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக் கேட்டேன்’’ என்று கூறினார்.

யோவான், அந்தப் புத்தகச்சுருளில் எழுதப்பட்டிருந்தவற்றை தாம் வாசிப்பார் என்றோ அல்லது யாரேனும் ஒருவர் அதன் வார்த்தைகளைத் தமக்கு வாசித்துக் காண்பிப்பார் என்றோ நினைத்து இருக்கலாம். வாசித்தல் அல்லது வாசிக்கக் கேட்டல் என்பதற்குப் பதிலாக, குதிரைகள் தாவிவருவதைக் காட்சியில் அவர் கண்டார். அந்தப் புத்தகச்சுருளானது, யோவானின் தரிசனத்தில் பக்கத்திற்குப் பக்கம் படங்களைக் கொண்டிருந்து தானே புரளுகிற சித்திரத் தொகுதியாயிற்று.[5] நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது சாதாரணமாகக் கிடைத்த ஒரு புத்தகம் என் நினைவுக்கு வருகிறது. இவ்வகையான புத்தகங்கள் ஒவ்வொன்றும் அதன் பக்கங்களின் மூலைகளில் கேலிச்சித்திரங்களின் வரிசைத்தொடர் ஒன்றைக் கொண்டிருக்கும். பக்கங்கள் (வேகமாய்த்) திருப்பப்படும்போது, அந்தக் கேலிச்சித்திரங்கள் உயிர்பெற்று இருப்பவைகள் போலக் காணப்படும்.

முதல் நான்கு முத்திரைகளின் அடையாளத்துவம், சில அம்சங்களில் அந்த நாட்களில் இருந்த யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு நன்கு பழக்கமானதாக இருந்தது. குதிரை என்பது வழக்கமாக யுத்தத்தின் சிந்தனைகளைத் தட்டியெழுப்பிற்று. ‘‘குதிரை என்பது யுத்தத்தின் மிருகமாய் இருந்தது: காளைகள் பண்ணை வேலைக்கும், கழுதைகள் போக்குவரத்துக்கும், குதிரைகள் யுத்தத்திற்கும் பயன்படுத்தப்பட்டன.’’[6] குதிரைகளின் எண்ணிக்கையும் அவைகளின் மாறுபட்ட நிறமும்கூட,

பழைய ஏற்பாட்டில் ஒரு மாற்றுப்பிரதியைக் கொண்டிருந்தன. சகரியா 1:8-10 மற்றும் 6:1-7 வசனப்பகுதிகள், தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்தப்பட்ட நான்கு விதமான நிறம்கொண்ட குதிரைகளைப் பற்றிக் கூறுகிறது. இருப்பினும் சகரியாவின் புத்தகத்தில் உள்ள குதிரைகளுக்கும் வெளிப்படுத்தின விசேஷம் 6ல் உள்ள குதிரைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காணமுடியும்.[7] கடைசி ஆய்வில், இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்களும் தனிச்சிறந்தவர்களாய் இருந்தனர்.

## செயல்பாடு!

*வெற்றி (6:1, 2)*

முதலாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, யோவான் "ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன், அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான், அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது,[8] அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்" என்று எழுதினார் (வசனம் 2). ("முதலாம் குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இந்தச் சவாரிசெய்பவர் ஒரு வில்லைப் பிடித்திருந்தார், இது இராணுவ பலத்தை அடையாளப்படுத்தும் ஒரு ஆயுதமாயிருந்தது (சங்கீதம் 46:9; எரேமியா 51:56; எசேக்கியேல் 39:3, 9; ஓசியா 1:5 ஆகிய வசனங்களைக் காணவும்). இந்த முதல் முத்திரையின் பெரும்பாலான அடையாளத்துவம் வெற்றியின் ஆய்வுக்கருத்தை எடுத்துரைக்கிறது: "பழங்காலத்தவர்களின் மத்தியில், வெள்ளைக்குதிரை என்பது வெற்றியை அடையாளப் படுத்திற்று."[9] இதில் சவாரி செய்தவருக்குக் கொடுக்கப்பட்ட கிரீடம், ஆளுகை செய்யும் கிரீடம் (*diadema*) அல்ல, ஆனால் வெற்றியின் கிரீடம் (*stephanos*) என்பதாக இருந்தது.[10] மேலும், "ஜெயிக்கிறவன்" மற்றும் "ஜெயிப்பவன்" என்ற வார்த்தைகள் *nike* ("வெற்றி") என்பதின் வினைவடிவில் இருந்து வந்துள்ளன.

வெற்றிகரமாக சவாரிசெய்யும் இவரை அடையாளப்படுத்துவது என்பது நமக்குச் சாத்தியமானதாக உள்ளதா? நான்காவது குதிரை வீரர் "மரணம்" (6:8) என்று அடையாளப்படுத்தப்பட்ட உண்மையானது, சவாரிசெய்யும் ஒவ்வொருவருக்கும் பொதுவான பெயர்ப்பட்டியொன்று தரப்படமுடியும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. விஷயம் இப்படியிருந் தால், "வெள்ளைக் குதிரையின்மீது சவாரிசெய்பவர் யாரை அல்லது எதைக் குறிப்பிட்டார்?" என்று நாம் கேட்கின்றோம்.[11]

பல ஆண்டுகளுக்கு முன்பு நான், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பற்றிப் போதிக்கத் தொடங்கியபோது, சவாரி செய்யும் இவர் இயேசுவாகவே இருந்தார் என்று நிச்சயமாயிருந்தேன். அதிகாரம் 19ல் கிறிஸ்து வெள்ளைக் குதிரையின்மீது தோன்றுகின்றாரே. இந்தக் கண்ணோட்டம் ஒரு பலத்த பின்பற்றுதலைக் கொண்டுள்ளது, இது

சரியானதாக இருக்கலாம்;[12] ஆனால் காலம் கடந்தபோது, நான் பிராங்க் பேக் அவர்களால் விளக்கப்பட்ட அதே முடிவை அடைந்தேன்: "இந்தக் குதிரைக்கும் சவாரி செய்பவருக்கும், 19:11ல் விவரிக்கப்படுகிற குதிரையின் மீது சவாரிசெய்பவருக்கும் இடையில் உள்ள ஒரே ஒற்றுமையாக உள்ளது … குதிரையின் நிறம் என்பது மட்டுமேயாகும்."[13] சில நேர்மாறுகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

| முதல் குதிரை வீரர் (வெளிப்படுத்தின விசேஷம் 6:2) | இயேசு (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-16) |
|---|---|
| ஒரு கிரீடம் | பல கிரீடங்கள் (வசனம் 12) |
| வெற்றி கிரீடம் (stephanos) | ஆளுகைசெய்யும் கிரீடம் (diadems) (வசனம் 12) |
| வில் வைத்திருந்தார் | பட்டயம் வைத்திருந்தார் (வசனம் 15) |
| மூன்று குதிரை வீரர்களால் தொடரப்பட்டார் | பரலோக சேனையினால் தொடரப் பட்டார் (வசனம் 14) |
| பெயரிடப்படவில்லை | பெயரிடப்பட்டார் (வசனங்கள் 11-13, 16) |
| உடையைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை | இரத்தத்தில் தோய்க்கப்பட்ட உடையணிந்தவர் (வசனங்கள் 13, 16) |
| வெற்றி அடைதல் | நீதியைச் சரிக்கட்டுகின்றவர் (வசனங்கள் 11, 15) |

சந்தர்ப்பப்பொருளானது, முதலாம் குதிரைவீரர் என்பவர், பூமியின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அழிவுசக்திகளின் அத்தியாவசியமான பாகமாக மற்றும் மூன்று குதிரைவீரர்களுடனும் அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாக உள்ளது. பின்வரும் கருத்தைச் சற்றே சிந்தியுங்கள்: நான்கு குதிரை வீரர்களும், நான்கு ஜீவன்களினால் ஒரேவகையில் அறிமுகப்படுத்தப்பட்டனர். (நான்கு ஜீவன்களும் மற்ற முத்திரைகள் எதையும் அறிமுகப்படுத்தவில்லை.) நான்கு குதிரை வீரர்களும் ஒருவர் பணிக்கு மற்றவர்கள் துணையாயிருக்கும்படிக்கு ஒரு குழுவாகச் செயல்பட்டனர் என்பது உறுதி. மற்றும், "நான்கு" என்பது வானவியல் எண்ணாக[14] - இந்தப் பூமிக்குத் தொடர்புடைய எண்ணாக - உள்ளது என்ற உண்மையானது, இந்த நான்கு குதிரை வீரர்களும் பூமியின் பேரழிவில் ஈடுபட்டிருந்தனர் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.[15]

அதிகாரம் 6ல் வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவர், அதிகாரம் 19ல் வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவருக்கு (கிறிஸ்துவுக்கு) நேர்மாறாக இருத்தலை நோக்கங்கொண்டிருந்தார் என்ற கருத்திற்கு நான் இணங்குகின்றேன்;[16] அதிகாரம் 6ல் வரும் குதிரைவீரர் வெற்றிகொள் பவராகத் தோற்றமளித்தார்,[17] ஆனால் இயேசுவே உண்மையான வெற்றி யாளராக இருப்பார்.[18]

நான் சரியான கருத்துக் கொண்டிருந்தால், இந்த முதலாம் குதிரைவீரர்மீது என்ன பெயர்ப்பட்டி இடப்படலாம்? "ஏகாதிபத்தியம்" அல்லது "பெருவிருப்பம்" ("பேராசை") என்று பெயரிடப்படுதல் பற்றிய

*கருத்து என்ன?[19] இன்னொருவருக்குரியதின்மீது ஒரு குழு கொள்ளுகின்ற இச்சையினால், அடிக்கடி உலகளாவிய விரோதம் உந்தி இயக்கப்படுகிறது. பேராசை என்பது எவ்வித மாறுபாடும் இன்றி, எதிர்ப்பைச் சந்திக்கிறது மற்றும் கலகத்தை விளைவிக்கிறது. விரோதத்தின் - அது உலகளாவியதோ, நாடளாவியதோ அல்லது தனிப்பட்டதோ, எதுவாயிருப்பினும் அதன் - ஆதாரமூலத்தைப் பற்றி யாக்கோபு பேசியபோது, அவர் "உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது, உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?" என்று எழுதினார் (யாக்கோபு 4:1). இவ்விதமாக முதல் குதிரை வீரர், இரண்டாவது குதிரை வீரருக்குக் காட்சியை அமைத்தார்.*

### *கொந்தளிப்பு/கலவரம் (6:3, 4)*

> *அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது சிவப்பான[20] வேறொரு குதிரை புறப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச்[21] சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது: ஒரு பெரிய பட்டயமும்[22] அவனுக்குக் கொடுக்கப்பட்டது (வசனங்கள் 3, 4). ("இரண்டாவது குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவர் யார் என்பது பற்றிய நமது கருத்தில் நாம் ஒருமையின்றி இருக்கலாம், ஆனால் இந்த இரண்டாவது வீரருக்குப் பெயரளித்தல் பற்றி நாம் இடர்ப்பாடு எதுவும் கொண்டிருப்பதில்லை: இவர் இரத்தம்போன்று சிவப்பான குதிரையின்மீது சவாரி செய்தார், இவர் பூமியிலிருந்து சமாதானத்தை துரத்திவிட்டார், இவர் மனிதர்கள் தனிப்பட்ட விரோதத்துடன் ஒருவரையொருவர் கொலை செய்யும்படி தூண்டிவிட்டார், மற்றும் ரோமச் சேனையினால் பிரபலமாக்கப்பட்டிருந்த மரணத்திற்கு ஏதுவான பட்டயம் ஒன்றை அவர் உயர்த்திப் பிடித்திருந்தார்.*

*இவர் நாடுகளை/மக்களினங்களைப் பேரழிவுக்கு உட்படுத்துகின்ற கொடுமையும் இரத்ததாகமும் உடைய குதிரை வீரராய் இருக்கின்றார், இவர் குடும்பவட்டாரங்களில் வெறுமையான இடத்தை விட்டுச்செல்லுகின்ற, தாய்மார்களின் இருதயங்களை உடைக்கின்ற நபராய் இருக்கின்றார். இது பிள்ளைகள் மற்றும் ஒன்றும் அறியாத பிறர் உட்படப் பல்லாயிரக் கணக்கானவர்களை அழிக்கின்ற யுத்தமாக[23] உள்ளது.*

### *சோதனைகள் (6:5, 6)*

*பொருளாதார சிரமம் என்பது யுத்தத்தினால் ஏற்படும் தவிர்க்க இயலாத விளைவாக உள்ளது.[24] எனவே மூன்றாவது குதிரை வீரர் அனுப்பப் பட்டார்:*

*அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக் குதிரையைக்[25] கண்டேன், அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி[26] கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு[27] மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன் (வசனங்கள் 5, 6). ("மூன்றாவது குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

இந்தக் குதிரை வீரர், குதிரை வீரர்களுக்கு வழக்கமற்ற ஒரு கருவியைக் கையில் பிடித்திருந்தார்: முதலாம் குதிரை வீரர் ஒரு வில்லைப் பிடித்திருந்தார், இரண்டாம் குதிரை வீரர் ஒரு பட்டயத்தைப் பிடித்திருந்தார், ஆனால் இந்தக் குதிரைவீரர் ஒரு *தராசைத் தன் கையிலே பிடித்திருந்தார்* - இது இங்கு குறிப்பிடப்பட்ட தானியத்தை நிறுப்பதற்கானது என்பது உறுதி. ஒருவரின் உணவை நிறுக்க வேண்டியதின் அவசியம், எல்லைக்குட்பட்ட விநியோகத்தை மறைமுகமாய்க் குறிப்பிட்டது (லேவியராகமம் 26:26; எசேக்கியேல் 4:16 ஆகிய வசனங்களைக் காணவும்). குறைந்தபட்சம், சராசரி மனிதனுல் பெறக்கூடிய அளவானது, எல்லைக்கு உட்படுத்தப்பட்டது - இது, "ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும்" என்ற கூற்றினால் சுட்டிக்காண்பிக்கப்படுகிறது.

பணம் (தினேரியம்) என்பது சாதாரணத் தொழிலாளியின் ஒருநாள் கூலியாக இருந்தது (மத்தேயு 20:2ஐக் காணவும்), மற்றும் ஒருபடி கோதுமை என்பது "ஒரு நபருக்கு ஒரு நாளில் சாதாரணமாய் ஏற்படும் பசியைத் தணிக்கப் போதுமானதாக" இருந்தது.[28] இவ்விதமாக, இங்கு சித்தரிக்கப்பட்டுள்ள இடர்ப்பாடு மிகுந்த காலத்தில், ஒரு தொழிலாளி தான் உண்பதற்குப் போதுமான கோதுமையை வாங்கக் கூடிய அளவுக்கு மாத்திரமே சம்பாதிக்க முடிந்தது - அவரது குடும்பத்திற்கு ஏதொன்றும் மிச்சப்படுவதில்லை. குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்த மனிதர்கள், வாற்கோதுமையை வாங்கிக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. வாற்கோதுமை என்பது விலங்குகளால் அல்லது விலங்குகள்போல் வாழும்படிக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களால் மாத்திரம் பயன்படுத்தத் தகுதியானது என்று கருதப்பட்ட ஒரு முரட்டுத்தன்மை கொண்ட தானியமாக இருந்தது[29] - ஆனால் இது விலைமலிவானதாக இருந்தது: அதாவது, ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை கிடைத்தது.

பழங்கால எழுத்தாளர்களின் கூற்றுப்படி, இங்கு குறிப்பிடப்பட்ட விலைகள், கோதுமை மற்றும் வாற்கோதுமை ஆகியவற்றின் சாதாரண விலையைக் காட்டிலும் எட்டு முதல் பதினாறு மடங்கு வரை அதிகமானவைகளாயிருந்தன. வரம்புமீறிய பணவீக்கம் என்பதே இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஒலிவ எண்ணெய் மற்றும் திராட்சரசம் போன்ற மற்ற உணவுப் பொருட்களைப் பற்றிய விஷயம் என்ன? சாதாரணக் குடிமகன் இவற்றை வாங்க இயலாதிருந்தது[30] - இது அனேகமாக, "எண்ணெயையும் திராட்சரசத்

*தையும் சேதப்படுத்தாதே"[31] என்ற ஒளிவுமறைவான கட்டளையின் தனிச்சிறப்பாயிருக்கலாம்.*

*மூன்றாவது குதிரைவீரர் பூமியின்மீது முழக்கமிட்டு வந்தபோது, ஒரு சாதாரணத் தொழிலாளி தன் குடும்பத்திற்கு, உடை, வீடு அல்லது வாழ்வின் மற்ற தேவைகள் எதுவும் நிறைவுசெய்யாமல் விடப்பட்டு, அதற்கு உணவளிப்பதற்காக மாத்திரமே, சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையிலும் உழைக்க வேண்டியிருந்தது! அவனது பரிதபிக்கப்படத்தக்க நிலையை அடையாளப்படுத்துவதற்கு, உங்கள் ஊதியம் உயராதிருக்கும் நிலையில், பலசரக்குப் பொருட்களும் மற்ற அத்தியாவசியப் பொருட்களும் 1,600 சதவிகிதம் விலை உயர்ந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்துபாருங்கள்!*

***உபத்திரவம் (6:7, 8)***

*யுத்தத்தின் பின்விளைவுகளை நாம் இன்னும் முழுமையாகப் பார்த்து முடிக்கவில்லை, நான்காவது குதிரைவீரர் இன்னும் வரவேண்டியிருந்தது, இவர் மங்கின நிறமுள்ள குதிரையின்மீது சவாரி செய்யும், பயங்கரத்திற் குரியவராய் இருந்தார்:*

> *அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன், அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர், பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான[32] அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது (வசனங்கள் 7, 8). ("நான்காவது குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*நான்காவது வீரரின் வாகனமானது பயங்கரத்திற்குரிய நிறம் கொண்டதாக இருந்தது. "மங்கின" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள chloros என்ற வார்த்தை, "பச்சை" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையாக உள்ளது. இந்தக் குதிரை "மங்கின பச்சை நிறமுள்ளதாக," அழுகிப்போன மாம்சத்தின் வர்ணம்போல் இருந்தது.*

*பச்சைக் குதிரையின்மீது மரணம் என்ற பயங்கரமானவர் சவாரி செய்தார், மற்ற வீரர்களினால் விடப்பட்டிருந்தவர்களைக் கூட்டிச் சேர்த்தல் என்பதே இவரது பணிப்பொறுப்பாக இருந்தது. மரணத்திற்குப் பின்னால் நெருக்கமாக, பாதாளம் இருந்தது, இது உருவமற்ற ஆவிகளின் தங்குமிடமாகும்.[33] பாதாளத்தை "ஐந்தாவது குதிரைவீரர்" என்றோ அல்லது தனிப்பட்ட உயிர்ப்பொருள் என்றோ நினைக்காதீர்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் பாதாளம் என்பது எப்போதுமே மரணத்துடன் இணையாகக் கூறப்பட்டுள்ளது (1:18; 20:13, 14). இவ்விரண்டும் ஒன்றாய் செயல்பட்டன, மரணம் உடலை உரிமை கோருகையில், பாதாளம் ஆத்துமாவை உரிமை கோரிற்று.*

*மரணம் என்பது, முக்காடிட்ட ஒரு மண்டையோட்டு முகத்துடன் சவாரி செய்வதாக அடிக்கடி சித்தரிக்கப்படுகிறது. பாதாளம் என்பது, திறந்த கல்லறையாக அல்லது தடுமாறும் உயிரினம் ஒன்று "நொண்டிக்கொண்டு, தனது நிலைபிறழ்ந்த உறுப்புக்களில் ஒன்றை இழுத்துக்கொண்டு" செல்லும் நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.[34] பாதாளத்தை நான், மரணத்திற்குப் பின்னால் நெருக்கமாக, மங்கிய நிறமுள்ள குதிரை வீரரால் விழத்தள்ளப் பட்ட யாவரையும் விழுங்குவதாக, கணத்திற்குக் கணம் சுழலும் புகை பெரியதாய் வளருவதாக நான் காண்கிறேன். இவைகள் இரண்டும் பயங்கரம் நிறைந்த இணையை ஏற்படுத்துகின்றன.*

*முதல் மூன்று குதிரை வீரர்களால் விடப்பட்டிருந்தவற்றைப் பயங்கரமாக அறுவடை செய்வதுடன் கூடுதலாக, மரணத்திற்கும் பாதாளத் திற்கும் "பட்டயத்தினாலும்,[35] பஞ்சத்தினாலும், சாவினாலும்,[36] பூமியின் துஷ்ட மிருகங்களினாலும்,[37] பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படி" கூறப்பட்டது. யுத்தம் முடிந்தவுடன் யுத்தத்தின் விளைவுகள் முடிவதில்லை. வியாதிகள், பட்டினி, மற்றும் யுத்தத்தினால் பீறிப்போடப்பட்ட வன்முறை நிகழ்ச்சி போன்ற சண்டையில் இறப்பவர் களைக் காட்டிலும் கடைசிக்குண்டு வெடிக்கப்பட்ட பின்பு இறப்பவர்கள் அதிகமானவர்களாய் இருத்தல் என்பது அசாதாரணமானது அல்ல.*

*மரணத்தின் இந்த நான்கு முகவர்களும், எருசலேமின் பாவத்திற்காக அதைத் தண்டிப்பதற்குத் தேவனால் பயன்படுத்தப்பட்ட விஷயங்களைப் போன்றவைகளாகவே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கலாம். எசேக்கியேல் 14ல், கர்த்தர் தமது "பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளை நோய் என்னும் இந்நான்கு கொடிய தண்டனைகளையும்" அனுப்பவிருந்ததாகத் தீர்க்கதரிசியினிடத்தில் கூறினார் (வசனம் 21). பாவம் என்பது தன்னிலேயே கட்டப்பட்டிருந்த விளைவுகளைக் கொண்டிருந்தது. "மனு ஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7). இது மக்களினத்திற்கும் உண்மையானதாகவே உள்ளது.*

## *நடைமுறைப் பயன்பாடு?*

*நான்கு குதிரை வீரர்களும் "*T*" என்ற பெரிய எழுத்தைக் கொண்டு* Trouble *(இடர்ப்பாடு) என்று குறிக்கப்படலாம் என்பது தெளிவு, ஆனால் இந்த வீரர்களைப் பற்றியும் தேவனுடைய திட்டத்தில் இவர்களுடைய நோக்கங்கள் பற்றியும் நாம் இன்னும் அதிக திட்டவட்டமானவர்களாய் இருக்க முடியுமா?*

*முதல் நான்கு முத்திரைகள், ரோமப்பேரரசைத் தண்டிப்பதற்கான தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துதல் என்பதை (முழுமையாக இல்லாவிட்டாலும்) அடிப்படையான நோக்கமாகக் கொண்டிருந்தன என்ற கருத்திற்குச் சிலர் இணங்குகின்றனர். துன்மார்க்கத்தின்மீதான தண்டனையை உள்ளடக்காமல் இருக்க முடியாது[38] என்றிருக்கையில், இது இந்தத் தரிசனத்தின் அடிப்படை வலியுறுத்தமாய் இருந்தது என்பதில் நான் சந்தேகம் கொள்கின்றேன்: (1) வெளிப்படுத்தப்பட்ட துன்பங்கள், உலகம்*

முழுவதிலும், ரோமர்களோ கிறிஸ்தவர்களோ, எவர்களாயிருப்பினும் குதிரைவீரர்களின் கொந்தளிக்கும் பாதையில் இருந்த யாவராலும் அனுபவிக்கப்பட்டன.[39] (2) குதிரைவீரர்களைத் தொடர்ந்து ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டது, இது வேதசாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்கள், "அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் ... எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?'' என்று சத்தமிட்டுக் கூப்பிடுதலை வெளிப்படுத்துகிறது (6:10). இவர்கள், இந்தக் குதிரை வீரர்கள் பயணம் செய்த இரத்தக்கறை படிந்த சாலையில் கொல்லப்பட்டனர் என்று யூகித்தல் இயல்பானதாக உள்ளது.[40] (3) வேதசாட்சிகள் பற்றிய சித்தரிப்பைத் தொடர்ந்து ஆறாம் முத்திரை உடைக்கப்படுதல் வருகிறது (6:12-17), இது துன்மார்க்கருக்குத் தண்டனை பற்றி அக்கறையுடையதாக உள்ளது - எனவே இது, முந்திய முத்திரைகள் வேறுசிலவற்றைக் குறிக்கின்றன என்று மறைமுகமாய் உணர்த்துகிறது.

இவை எல்லாவற்றையும் கருத்தில் எடுத்துக்கொள்ளுகையில், நான்கு குதிரை வீரர்களுக்கும் பொதுவான விளக்கம் ஒன்று அவசியமாகிறது என்று காணப்படுகிறது - இந்த விளக்கமானது, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர் களால் எதிர்கொள்ளப்பட்டிருந்த தனிப்பட்ட பிரச்சனைகளின் உண்மை நிலையுடன் உலகளாவிய துன்பத்தின் கருத்தை ஒன்றுகலந்த விளக்கமாக இருத்தல் வேண்டும். இதைப் பற்றிய எனது விளக்கம் முழுமைத் தன்மையில் இருந்து தொலைவில் உள்ளது, ஆனாலும் அதை நான் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்:

> மனிதனுடைய பேராசை (முதல் குதிரை வீரர்), கலகம் மற்றும் சோதனைகள் (இரண்டாம் மற்றும் மூன்றாம் குதிரை வீரர்கள்) ஆகியவை உலகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இந்தத் துன்பங்களுடன், பாவம் நிறைந்த உலகில் உள்கட்டமைப்பாக இருந்த உபத்திரவங்களும் (நான்காவது குதிரை வீரன்) கூடுதலாயிருந்தன.
>
> கலகம், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் என்பவை எல்லா மனிதர்களுக்கும் உரிய பங்குகளாய் இருக்கின்றன, ஆனால் கிறிஸ்தவர்கள் இரண்டு மடங்கைப் பெறுகின்றனர்: இயேசுவைப் பின்பற்றுபவர்கள் வாழ்வின் சாதாரண கேடுபாடுகளுக்கு ஆளாவதுடன், அவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்.

"கிறிஸ்தவர்கள் இரண்டு மடங்கைப் பெறுகின்றனர்" என்பதற்கான ஒரு விவரிப்பு என்ற வகையில், மூன்றாவது குதிரை வீரரால் நபர்த்துவப் படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்குலைவை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "கிறிஸ்தவர்களை எதிர்த்து நின்றவர்களால் அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு விலகும்படி வற்புறுத்துவதற்காக, அவர்களை சந்தையிடங்கள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கி வைத்தல் என்பது கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட முதன்மையான ஆயுதங்களில் ஒன்றாக இருந்தது."[41]

வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசுவின் செய்தியானது முதலாவதாக மற்றும் முக்கியமாக ‘‘தம்முடைய ஊழியக்காரருக்கு’’ (1:1) என்றிருந்தபடியால் 6:1-8ல், யோவானும் மற்ற கிறிஸ்தவர்களும், தங்களை நோக்கியே இந்த நான்கு குதிரைவீரர்களும் பாய்ந்துவந்தனர், அவர்கள் தங்களை (கிறிஸ்தவர்களை) அழிப்பதையே நோக்கங்கொண்டிருந்தனர் என்று காணும்படிக்கு இயேசு விரும்பினார் என்று நான் நம்புகின்றேன்.

இந்தக் காட்சியை, இது யோவானுக்குக் காணப்பட்டபடி காட்சிப் படுத்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்கள் சிந்தையில், மென்மையான பந்தயக் குதிரைகளையல்ல, ஆனால் “விம்மிப் பெருத்த தொடைகளும் நெருப்பைக்கக்கும் நாசித்துவாரங்களும் கொண்டு, தங்கள் பயங்கரமான குளம்புகளைக் கொண்டு காற்றில் முன்னோக்கிப் பாய்ந்து வருகிற”[42] பெரிய அளவிலான யுத்தக்குதிரைகளைச் சித்தரித்துப் பாருங்கள். மேலும் இந்த வீரர்கள், “வரலாற்றுக் காலகட்டங்களில் வரிசையைக் குறிப்பது இல்லை”[43] என்பதையும் சிந்தையில் கொள்ளுங்கள். அவர்கள் நாள்வரிசை முறையில் தோன்றுவதற்குப் பதிலாக தர்க்கவியல் முறையில் தோன்றுகின்றனர்.[44]

பின்பு, தடதடக்கும் குளம்பொலியுடனும், பளபளக்கும் கண்களுடனும், காற்றில் பிடரிமயிர் பறக்க, குதிரையின்மேல் அமர்ந்திருப்பவர்கள் துரத்துவதால் நான்கு யுத்தக்குதிரைகள் அருகருகாகப் பாய்ந்து வந்து - உங்களை அச்சுறுத்துவதைக் கற்பனை செய்து பாருங்கள்.[45] உங்கள் சிந்தை அனுமதிக்குமென்றால், அவற்றின் குளம்புகள் உங்கள் மாம்சத்தைக் கிழித்து, உங்கள் எலும்புகளை நொறுக்கி, உங்கள் உடலில் இருந்து உயிரை நசுக்குவதற்கு முன்பு அவற்றின் நாசித்துவாரங்களில் இருந்து வரும் வெப்பமான மூச்சை உணருங்கள்.

ஏர்ல் பால்மர் அவர்கள், “இறையியல் வெளிப்பாட்டின் இந்த நான்கு குதிரைகள் மற்றும் அதன்மீது ஏறியிருந்தவர்கள் போல் அச்சுறுத்தும் பயங்கரச் சித்தரிப்பு வேறெதுவும் அனேகமாக இருப்பதில்லை’’ என்று கூறினார்.[46] இதைத் தொடர்ந்து வருகிற முத்திரைகள் பற்றிய வெளிப் படுத்துதல்களை மதித்து உணருவதற்கு, அந்தப் பயங்கரத்தை நீங்கள் உணர வேண்டும். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் இடத்தில் உங்களை வைத்து அவர்கள் வாழ்வில் இருந்த அபாயத்தை ருசிபாருங்கள்!

## முடிவுரை

அடுத்த பாடத்தில் நாம், நான்கு குதிரை வீரர்கள் பற்றிய நமது படிப்பைத் தொடருவோம், அதில் அவர்கள் இன்றைய நாட்களில்கூட நமது வாழ்வில் எவ்வாறு செயல்தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதை ஆழ்ந்து சிந்திப்போம். இருப்பினும், இந்தப் பாடத்தை முடிப்பதற்கு முன்பு, ‘‘தேவன் கிறிஸ்தவர்களுக்கான தமது செய்தியை இப்படிப்பட்ட பயங்கரமான தரிசனத்துடன் தொடங்கியது ஏன்?’’ என்று நாம் கேட்க வேண்டும். முத்திரைகள் உடைக்கப்படத் தொடங்கியபோது, சமாதானத்தின் செய்தியையே யோவான் எதிர்பார்த்து நம்பியிருந்திருக்க வேண்டும்; அதற்குப் பதிலாக அவர் பிரச்சனைகள் பற்றி நினை

வூட்டப்பட்டார். ஏன்? தேவனுடைய சிந்தையை நம்மால் அறிய இயலாது, ஆனால் இந்த நான்கு குதிரைவீரர்களை முன்னதாக அனுப்பியதற்கான சாத்தியக்கூறுள்ள சில நோக்கங்களை அறிமுகப்படுத்த என்னை அனுமதியுங்கள்.

*(1) முன்வந்து கொண்டிருந்தவற்றிற்காகக் கிறிஸ்தவர்களை ஆயத்தம் செய்தல்.* "முன்னெச்சரிக்கை செய்தல் என்பது முன்னதாகவே ஆயுதம் தரித்திருத்தலாக உள்ளது" என்ற பழைய கூற்றை நான் ஒப்புக் கொள்கின்றேன்.

*(2) தேவன் இன்னமும் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதை வலியுறுத்துதல்.* இந்த எட்டு வசனங்களையும் நன்கு வாசித்து, "இங்கு வா!" மற்றும் "கொடுக்கப்பட்டது (அல்லது அனுமதிக்கப்பட்டது)" என்பது போன்ற சொற்றொடர்களை அடிக்கோடு இடுங்கள். குதிரைவீரர்கள் தங்களுக்குத் தேவன் அனுமதித்திராத எதையும் செய்யவில்லை.

*(3) கிறிஸ்தவர்களின் பிரச்சனைகளைத் தேவன் எல்லைக்கு உட்படுத்துகின்றார் என்பதை வலியுறுத்துதல்.* 1 கொரிந்தியர் 10:13, தேவன் உண்மையுள்ள கிறிஸ்தவர்களை, அவர்களால் தாங்க இயலுகின்றவற்றிற்கு அப்பால் சோதிக்கப்பட அனுமதிப்பதில்லை என்று வலியுறுத்துகிறது. இதேபோன்ற ஒரு சிந்தனையானது 6:8ல் அடையாளத்துவமாக விளக்கப்படுகிறது, இது மரணம் மற்றும் பாதாளம் ஆகியவற்றின் அதிகாரம் "பூமியில் நான்கில் ஒரு பங்கினரை"[47] மாத்திரம் அழிக்கும் அளவுக்கு எல்லைக்கு உட்படுத்தப்பட்டது என்று கூறுகிறது. நம்மை ஒடுக்குகின்றவர்கள்மீது தேவன் எல்லைகளை வைக்கிறார்.

*(4) நாம் "நல்லது" என்றோ அல்லது "மோசமானது" என்றோ நினைக்கின்றதான, நமக்கு நடக்கின்ற யாவற்றிலும் தேவன் செயல்முனைப்புடன் இருக்கின்றார் என்று போதித்தல்.* இது 6:1-8ன் மிகமுக்கியமான பாடங்களில் ஒன்றாக உள்ளது. தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இதைப் பற்றி நாம், அடுத்த பாடத்திலும் அதற்கடுத்த பாடத்திலும் அதிகமாய்க் கலந்துரையாடுவோம், ஆனால் இந்த சத்தியமானது நமது படிப்பில் இருந்து ஏற்கனவே தெளிவாகியிருக்க வேண்டும். தேவன் தாம் செய்கிறது இன்னதென்று அறிகின்றார்! அவர்மீது நம்பிக்கையாய் இருக்கக் கற்றுக்கொள்ளுதல் என்பதே நமது அறைகூவலாக உள்ளது![48]

---

குறிப்புகள்

[1]இந்தப் பாடத்தில் உள்ள ஆங்கில வார்த்தைகள் *American Heritage Electronic Dictionary*, 3d. ed. (1992) என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அகராதிகள் பிரபலமான விளக்கங்களைத் தருகின்றன, அவைகள் வேதாகம ரீதியானவைகளாய் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். [2]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 59. [3]உயிருள்ள மற்ற ஜீவன்கள்

“இரண்டாவது” (4:3), “மூன்றாவது” (4:5) மற்றும் “நான்காவது” (4:7) என்று அடையாளப்படுத்தப்படுவதால் இது ‘‘சிங்கத்தைப் போன்றிருந்த’’ (4:7) “முதலாவது” ஜீவனாக இருந்தது என்பது உறுதி. (இந்த நான்கு ஜீவன்களையும் பற்றிய விவரிப்புகளுக்கு 4:7ஐக் காணவும்.) [4]பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் “Come and see” [“வந்து பார்”] என்றுள்ளது, தமிழ் வேதாகமத்திலும் இவ்வாறே உள்ளது, இது யோவானுக்கு உரைக்கப்பட்டது என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. இருப்பினும் கையெழுத்துப்பிரதிகளின் முழுமையான ஆதாரமானது ‘‘வா’’ என்று மாத்திரமே கூறப்படுவதை ஆதரிக்கிறது, இது அனேகமாக, குதிரையின்மீது ஏறியிருந்தவர்களுக்கான ஒரு கட்டளையாக இருக்கலாம். [5]This sentence was adapted from Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), 71. [6]Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: HarperCollins Publishers, 1988), 74. [7]சகரியாவின் தரிசனத்தில் வந்த குதிரைகள் இரதங்களை இழுத்துச் சென்றவைகளாய் இருக்கையில், வெளிப்படுத்தின விசேஷம் 6ல் வந்த குதிரைகள் தங்கள் மீது சவாரி செய்பவர்களைக் கொண்டிருந்தன. சகரியா புத்தகத்தின் குதிரைகள் ஒரு அறிக்கையைக் கொண்டுவந்தன, வெளி. புத்தகத்தின் குதிரைகள் அழிவைக் கொண்டுவந்தன. நிறங்கள் என்பது மூன்றாவது வேற்றுமையாக உள்ளது: வெளி. புத்தகத்தில், குதிரைகளின் நிறங்கள் அவற்றின்மீது சவாரி செய்பவர்களால் விதிக்கப்பட்ட தண்டனையின் வகையை எடுத்துரைக்கிறது. [8]வசனம் 2ல் உள்ள கற்பனையானது, வில்லுகள் மற்றும் கிரீடங்கள் ஆகியவற்றுடன் சித்தரிக்கப்பட்டிருந்த பார்த்தியக் குதிரைவீரர்கள் பற்றிய விபரத்தின் எச்சமாக உள்ளது. (“வெளிப்படுத்தின விசேஷம், 1’’ என்ற புத்தகத்தில் உள்ள ‘‘ரோமாபுரிக்கு எதிராளி: பார்த்தியா’’ என்ற துணைப்பாடத்தைக் காணவும்.) இது, பார்த்தியர்கள் கைகளில் ரோமாபுரி துன்பப்படும் என்ற முன்னுரைத்தலின் அடையாளத்துவமாக உள்ளது என்று சிலர் நம்புகின்றனர்; மற்றவர்கள், இந்த உருவகமானது வெற்றிகொள்ளும் எந்த ஒரு சக்தியையும் குறிப்பிடுவதாக மாத்திரம் உள்ளது - அது பார்த்தியா, ரோமாபுரி அல்லது வெற்றிகொண்ட வேறு நாடுகள் எதை வேண்டுமென்றாலும் குறிக்கலாம் - என்று நம்புகின்றனர். [9]Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 64. See also James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 70. [10]“வெளிப்படுத்தின விசேஷம், 1” என்ற புத்தகத்தில் ‘‘செல்வத்துடன் இருந்த ஏழை சபை’’ என்ற பாடத்தில் கிரீடங்கள் பற்றிய குறிப்புகளைக் காணவும்.

[11]இந்தப் பாடத்தில் நான், வெள்ளைக் குதிரையின்மீது சவாரிசெய்பவரை அடையாளப்படுத்தும் இரண்டு சாத்தியக்கூறுகளை - அவர் இயேசுவாக இருக்கலாம் அல்லது வெற்றி/ஏகாதிபத்தியம் என்பதன் அடையாளமாக இருக்கலாம் என்பவற்றை - முன்வைத்துள்ளேன், ஏனென்றால், இவையிரண்டும் சட்டப்பூர்வமான சாத்தியக்கூறுகளாய் இருக்கின்றன என்று நான் நம்புகின்றேன். மற்ற கருத்துக்களும் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, “தொடர் வரலாறு” அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றவர்கள், இந்த வீரரைக் குறிப்பான வரலாற்றுப் பாத்திரமாக அடையாளப்படுத்த முயற்சி செய்துள்ளனர். (இந்த அணுகுமுறையின் பலவீனங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு “வெளிப்படுத்தின விசேஷம், 1” என்ற புத்தகத்தில் “நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது’’ என்ற பாடத்தில் காணவும்.) ‘‘எதிர்காலவியல்’’ அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றவர்கள் (ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள்) இந்த வீரரை “அந்திகிறிஸ்து” என்று (இது ஒரு குறிப்பிட்ட தனிநபர் என்று அவர்கள் நினைக்கின்றனர்) பொதுவாக அடையாளப்

படுத்துகின்றனர், ஆயினும் இந்தக் கருத்தை வசனப்பகுதி எவ்விடத்திலும் ஆதரிப்பதில்லை. (எதிர்காலவியல் அணுகுமுறையின் பலவீனங்கள் பற்றி "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தில் காணவும்.) முதல் வீரரை, (இயேசுவைத் தவிர) குறிப்பிட்ட ஒரு வரலாற்றுக் கதாபாத்திரம் என்று அடையாளப்படுத்தச் செய்யப்படும் எந்த முயற்சியும், இறையியல் வெளிப்பாட்டு மொழிநடையின் இயல்பைப் புறக்கணிப்பதாக உள்ளது. [12]இந்த நிலைப்பாட்டிற்குப் பலத்த ஆதாரத்தின் சுருக்கத்தை William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 113-17 என்ற புத்தகத்தில் காணமுடியும். [13]Pack, 64. [14]"நான்கு" என்பதின் அடையாளத்துவ அர்த்தம் பற்றிய கலந்துரையாடலை, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும். [15]வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவர் கிறிஸ்து அல்ல என்ற கருத்தை ஆதரிக்கும் பிற விவாதங்கள் தரப்பட்டுள்ளன. உதாரணமாக, முதல் முத்திரையை உடைத்து, பின்பு உடனடியாக ஒரு வெள்ளைக் குதிரையின்மீது சவாரிசெய்தல் என்பது ஆட்டுக்குட்டியானவருக்கு (கிறிஸ்துவுக்கு) இயல்பற்ற தன்மையாக உள்ளது என்று காணப்படுகிறது. [16]அதிகாரம் 19ல் கிறிஸ்து வெள்ளைக் குதிரையில் தோன்றும் போது, "இதோ" என்ற வார்த்தையை யோவான் பயன்படுத்தினார் (வசனம் 11), இவ்வார்த்தை ஆச்சரியத்தையும் உணர்வெழுச்சியையும் குறிப்பிடுகிறது. யோவான், வெற்றிக்குதிரையின்மீது இயேசுவை மீண்டும் காண்கின்ற நிலையாக இருப்பதைக் காட்டிலும் இது, அவ்வாறு அவர் காண்பதன் முதன்முறையாக இருந்திருந்தால்தான் இவ்வாறு உணர்வெழுச்சியையும் பெரும் வியப்பையும் ஏற்படுத்தியிருக்கும் என்பது அதிகம் சாத்தியக்கூறுள்ளதாக இருக்கிறது. [17]துன்மார்க்கச் சக்திகளுக்கு வெற்றியைக் குறிப்பிடுவதில் வெளிப்படுத்தின புத்தகம் தயங்குவதில்லை (எடுத்துக்காட்டாக 13:7ஐக் காணவும்); அது குறுகியகாலமே இருந்த வெற்றி என்பதும் உண்மையே, ஆனாலும் அது வெற்றியாகவே இருந்தது. [18]எனது கண்ணோட்டத்தைக் கூறின பின்பு, முதல் குதிரை வீரர் இயேசுவா அல்லவா என்பது பற்றி இதற்கு எதிராகப் பிடிவாதமாயிருப்பது பற்றி நான் எச்சரித்தாக வேண்டும். இவ்விரண்டு நிலைப்பாடுகளுக்குமே சட்டப்பூர்வமான ஆதாரங்கள் தரப்படக்கூடும், இவ்விரு அணிகளிலுமே நல்ல மனிதர்களும் புகழ் பெற்ற கல்வியாளர்களும் உள்ளனர். ஒருவர் எந்த நிலைப்பாட்டை மேற்கொண்டாலும், அடிப்படை முடிவு என்பது பின்வரும் ஒரேவிதமானதாகவே இருக்கும்: நான்கு குதிரைவீரர்களின் தரிசனமானது, உண்மையுள்ள கிறிஸ்தவராய் இருப்பதில் உள்ள சிரமத்தை அறிவிக்கின்றன! கிறிஸ்தவர்களின்மீதான உபத்திரவம் முதல் குதிரை வீரருடன் தொடங்குகிறதா அல்லது இரண்டாம் குதிரை வீரருடன் தொடங்குகிறதா என்பதே இந்த இரு நிலைப்பாடுகளுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடாக உள்ளது. [19]"ஏகாதிபத்தியம்" என்பது, ஆங்கில அகராதியில் "the policy of extending a nation's authority by territorial acquisition or by the establishment of economic and political [influnence] over other nations" என்று விளக்கப்படுகிறது [ஒரு நாடு, பிற நாடுகளின் எல்லைகளைப் பிடிப்பதால் அல்லது அவற்றின் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்குகளில் தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதால் தன் அதிகாரத்தை விரிவாக்கும் கொள்கை.] இருப்பினும் நான் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துவதில், ஒரு மக்களினம் அல்லது ஒரு தனிநபர் என்ற வகையில், மற்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான விருப்பம் என்பதையே என் சிந்தையில் கொண்டுள்ளேன். [20]"சிவப்பு" என்பது "நெருப்பு" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. CEV வேதாகமத்தில் "fiery

red" ["நெருப்பாய்ச் சிவந்த"] என்றுள்ளது.



ரோம பட்டயம் மற்றும் உறை

[21]"கொலைசெய்ய" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது 5:6, 9, 12 வசனங்களில் "அடிக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையாகவே உள்ளது. CEV வேதாகமத்தில், "so that people would slaughter one another" என்றுள்ளது. [22]இவ்விடத்தில் "பட்டயம்" என்பது, 1:16 மற்றும் 2:12 வசனங்களில் "பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையில் இருந்து மாறுபட்டதாக உள்ளது. இவ்விடத்தில் *machaira* என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது, இது ரோமபடையினரால் பயன்படுத்தப்பட்ட நெருக்கமான யுத்தத்திற்கான பட்டயமாய் இருந்தது. இந்தப் பட்டயம் "பெரிய" என்று அழைக்கப்பட்டதால் இது நீளமானதாக இருந்ததென்று அர்த்தமல்ல (*machaira* வின் மாதிரிகள் பாம்ப்பியின் சிதலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகள் பத்தொன்பதரை அங்குலம் நீளமும் இரண்டு அங்குலம் அகலமும் கொண்டவைகளாக மாத்திரமே உள்ளன), ஆனால் இது ரோமப் படையின் வெற்றிகளில் ஒரு பிரதான காரணியாக இருந்தபடியால் அவ்வாறு அழைக்கப்பட்டது. *Macahira* என்பது சிலர் நினைத்துள்ளதுபோல், ஆசாரியர்களால் விசேஷமாகப் பலியிடப் பயன்படுத்தப்படும் வளைவான கத்தியைக்கொண்ட பட்டயமல்ல. [23]வசனப்பகுதியானது, மனிதர்கள் "ஒருவர் மற்றவரை" கொலை செய்தல் பற்றிப் பேசுவதால், இவ்விடத்தில் உள்நாட்டு யுத்தம் விசேஷமாகக் கண்ணோக்கப்படுகிறது என்று சிலர் நினைக்கின்றனர். உள்நாட்டு யுத்தம் என்பது, சகோதரன் சகோதரனுக்கு விரோதமாக அணிவகுத்து நிற்குதல் என்ற வகையில் மிகவும் பயங்கரமான யுத்த வகையாக உள்ளது. [24]நாட்டுப்புறங்களில் வாழ்ந்து யுத்தத்தினால் சீர்குலைக்கப்பட்டுள்ளவர்கள் இந்தக்கூற்றின் உண்மைத்தன்மைக்குச் சாட்சியளிக்கக் கூடும். யுத்தமானது வேறிடத்தில் நடந்திருந்தால், ஒரு நாட்டின் பொருளாதாரமானது (மக்களில் ஒருசிலர் செல்வந்தர்களாவதைக்கொண்டு) தற்காலிகமாக மேம்பட்டு இருக்கலாம். இருப்பினும் கடைசியில் யுத்தம் பணத்தையும், காலத்தையும், முயற்சியையும், நாட்டின் உள்ளான பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் இருந்து விலக்கிவைக்கிறது - மற்றும் நாடு துன்புறுகிறது. [25]வேதவசனங்களில் கறுப்பு நிறம் என்பது பொதுவாக, துக்கம் மற்றும் புலம்புதல் ஆகியவற்றுடன் இணைவுகொண்டுள்ளது (ஏசாயா 50:3; எரேமியா 4:28; 14:2ஆகிய வசனங்களைக் காணவும்). இந்த நிறமானது சிலவேளைகளில், இவ்வசனத்தில் உள்ளது போல், உணவுக்குறைவுடன் இணைவுகொண்டுள்ளது (எரேமியா 14:1, 2; புலம்பல் 5:10 ஆகிய வசனங்களைக் காணவும்). [26]"படி" ("measure"["அளவு"]; KJV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது மிகச்சரியாக மொழிபெயர்க்கப்படுவதற்குக் கடினமானதாக உள்ளது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் புழக்கத்தில் இருந்த அளவுமுறைகள் இன்றைய நாட்களில் உள்ள அளவு முறைகளைப் போன்றே இருப்பதில்லை, மற்றும் நவீனகால அளவுமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. (எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் பேரரசின் படி என்பது அமெரிக்க நாட்டின் படி அளவு போன்றதாக இருப்பதில்லை.) நமது நோக்கங்களுக்காக, இது நீங்கள் வாழும் இடத்தில் "படி" என்று அழைக்கப்படும் அளவைவிடச் சற்றே குறைந்த அளவாக இருந்தது என்று நினைப்பது போதுமானது. [27]"பணம்" ["தினேரியம்"] என்பது கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. KJV வேதாகமத்தில் இவ்விடத்தில் "penny" என்றுள்ளது, ஆனால் NKJV வேதாகமத்தில் "denarius" என்றுள்ளது. [28]W. E. Vine, *The Expanded*

*Vine's Expository Dictionary of New Testament Words*, ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis, Minn.: Bethany House Publishers, *1984), 724.* *இந்த வார்த்தைகள் பெயரற்ற ஒரு பழங்கால அதிகாரியின், ஒருவேளை ஹெரோ டொட்டஸ்ஸின் கூற்றிலிருந்து வந்த மேற்கோளாக உள்ளன.* [29]*திரளான மக்கள் கூட்டத்திற்கு இயேசு உணவளித்தபோது, அவர் ஒரு பையனின் மதிய உணவைப் பயன்படுத்தினார், அதில் வாற்கோதுமையினால் செய்யப்பட்ட அப்பங்கள் இருந்தன (யோவான் 6:9). இது அந்தப் பையனுடைய வீட்டாரின் பொருளாதார நிலையைப் பற்றிச் சிலவற்றைக் கூறுவதாக இருக்கலாம்.* [30]*இது உணவுக்குறைவினால் ஏற்பட்ட பஞ்சமாக இருந்தது இல்லை என்று காணப்படுகிறது. உணவை வாங்கக் கூடியவர்களுக்கு அது கிடைத்திருந்தது.*

[31]*இந்தக் கட்டளையானது, தரிசனத்தின் இந்தப் பாகம், எண்ணெய் மற்றும் திராட்சரசம் ஏராளமாய் இருந்தது, அதே வேளையில் தானியக் குறைவு ஏற்பட்டிருந்தது என்று சுட்டிக்காண்பித்ததாகச் சிலர் நினைக்கின்றனர். யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள் பின்வரும் பொழிப்புரையைத் தந்தார்:* "But all the oil and wine you want" [*"ஆனால் நீ விரும்புகின்ற எண்ணெய் மற்றும் திராட்சரசம் எல்லாவற்றையும்"*] *(The Message: New Testament With Psalms and Proverbs* [Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995], 618). [32]*"கொலைசெய்ய" என்ற வசனம் 8ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது வசனம் 4ல் "கொலைசெய்ய" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையாக இருப்பதில்லை. (*KJV *வேதாகமத்தில் இரு வசனங்களிலும்* "Kill" *என்ற வார்த்தையே உள்ளது.) இது, இங்கு குறிப்பிடப்படுகிற மரணங்கள் மனிதகுலத்திற்குப் பொதுவாகச் செய்யப்பட்ட தவறான செயல்களினால் விளைந்தவையாக உள்ளன என்ற அளவுக்கு, அவைகள் கிறிஸ்தவர்களுக்குத் தனிப்பட்ட வகையில் தரப்பட்ட துன்புறுத்துதலின் விளைவாக இருந்தன என்று அர்த்தப்படுவதில்லை.* [33]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "கர்த்தர் அறிகின்றார்" என்ற பாடத்தில் 1:18க்கான குறிப்புகளைக் காணவும்.* [34]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 102. [35]*வசனம் 8ல் "பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, வசனம் 4ல் "பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையாக இருப்பதில்லை. (குறிப்பு எண் 22ஐக் காணவும்.) இந்தப் பட்டயம் ஒரு பெரிய யுத்தப் பட்டயமாக இருந்தது.* [36]"Pestilence" [*தமிழில் "சாவினாலும்"*] *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "மரணம்" என்பதற்கான வார்த்தையாகவே உள்ளது. பழங்காலத்தில், "மரணம்" என்பது, மக்களில் ஏராளமானவர்களைக் கொல்லும் கொள்ளை நோய்களைக் குறிப்பிட அடிக்கடி பயன்படுத்தப்பட்டது: கறுப்பு மரணம் (பியூபோனிக் கொள்ளைநோய்), சிகப்பு மரணம் (பெரியம்மை நோய்), வெள்ளை மரணம் (எலும்புருக்கி நோய்). வசனம் 8, ஏற்கனவே "மரணம்" மற்றும் "கொலை" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பதால், இவ்விடத்தில் "மரணம்"* [*"சாவு"*] *என்ற வார்த்தையானது அனேகமாகப் பலவகையான கொள்ளை நோய்களைக் குறிப்பிடுவதாயிருக்கலாம்.* [37]*வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், நகரங்கள் அழிக்கப்பட்டபோது, காட்டுமிருகங்கள் பொதுவாகப் பெருகி, அந்தப்பகுதியை மேற்கொண்டு விடும் (எரேமியா 9:11; 10:22; 49:33; 50:39).* [38]*நாம் காணப்போகின்றபடி, ஏழு எக்காளங்கள் மற்றும் ஏழு கலசங்கள் ஆகியவற்றின் நிகழ்ச்சித் தொடர்கள் ரோமாபுரியை எச்சரிக்கவும் பின்பு அதைத் தண்டிக்கவும் பயன்படுத்தப்பட்ட ஒரேவிதமான பேராபத்துக்களாக இருந்தன.* [39]*"நான்கு" என்பது வானவியல் எண்ணாக, மனிதகுலத்தின் எண்ணாக இருக்கிறது என்பதைச் சிந்தையில் வைத்துக்*

*கொள்ளுங்கள். (நான்கு என்பதின் அடையாளத்துவ அர்த்தம்பற்றிய கலந்துரையாடலை "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும்.) நான்கு குதிரைவீரர்களாலும் எல்லா மக்களும் ஒரு அளவுக்குப் பாதிக்கப்பட்டனர்.* [40]*6:4ல் உள்ள "கொலை" என்ற வார்த்தையானது 5:6, 9, 12ல் இயேசுவின் மரணத்தை விவரிக்கவும், 6:9ல் வேதசாட்சிகளின் மரணத்தை விவரிக்கவும் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக இருக்கிறது என்ற உண்மையானது, 6:4 வசனமானது இயேசுவைப் பின்பற்றுபவர்களாய் இருந்தவர்கள் கொல்லப்பட்டனர் என்று அர்த்தப்படுவதாக மறைமுகமாக உணர்த்தலாம்.*

[41]Efird, 71. [42]Graham, viii. [43]Eldred Echols, *Haven't You Heard? There's a War Going On! Unlocking the Code to Revelation* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 72. [44]*ஏகாதிபத்தியத்தை தொடர்ந்து யுத்தம் வந்தது. யுத்தத்தைத் தொடர்ந்து பொருளாதாரச் சிரமங்கள் வந்தன, மற்றும் இன்னும் பிற.* [45]*பிரையன் வாட்ஸ் வரைந்துள்ள நான்கு குதிரைகள் பற்றிய ஒட்டு மொத்தச் சித்திரத்தை இந்த புத்தகத்தில் காணவும்.* [46]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 177. [47]*"பூமியின் காற்பங்கினர்" என்பது மக்களின் ஏராளமான எண்ணிக்கை என்பதுபோல் ஒலிக்கிறது, ஆனால் நாம் மரணத்தைப் பற்றிப் பேசுகின்றோம் என்பதைச் சிந்தையில் வைக்கவும். எல்லா மக்களுமே கடைசியில் மரிக்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷத்தின் அடையாளத்துவத்தில், "நான்கில் ஒரு பகுதி" என்பது "எல்லாரும் அல்ல" என்று விசேஷமாக அர்த்தப்படுகிறது. ("நான்கில் ஒரு பகுதி" என்பதின் அடையாளத்துவ, அர்த்தத்தைப் பற்றிய கலந்துரையாடலை, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும்.)* [48]*இந்தப் பாடத்தைப் பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் கீழ்ப்படிதலின்மூலம் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தும்படி உற்சாகப்படுத்துங்கள் (மத்தேயு 7:21; மாற்கு 16:16; லூக்கா 6:46; நடபடிகள் 2:38).*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *நீங்கள் செய்தித்தாள்கள் அல்லது பத்திரிகைகளில், "இறை வெளிப்பாடு," "அர்மகெதோன்," "ஆயிரம் ஆண்டுகள்" அல்லது "நான்கு குதிரைவீரர்கள்" போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டிருக்கின்றீர்களா? அச்சிடும் நிறுவனம் பொதுவாக இவ்வார்த்தைகளைச் சரியாகப் பயன்படுத்துகின்றனரா?*
2. *சகரியா 1 மற்றும் 6ன் குதிரைகளை வெளிப்படுத்தின விசேஷம் 6:1-8ன் குதிரைகளுடன் ஒப்பிடவும். இவைகள் எந்தக் கருத்தில் ஒன்றுபோல் உள்ளன? எவ்வகையில் இவை மாறுபடுகின்றன?*
3. *முதல் குதிரையின்மீது ஏறியிருந்தவர் எவ்வகையில் பார்த்தியக் குதிரை வீரரைப் போல் இருந்தார்? ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ரோமாபுரிக்கு எதிராளி: பார்த்தியா" என்ற*

*துணைப் பாடத்தில் காணவும்.)*

4. *வெள்ளைக் குதிரையின்மீது இருந்தவர் கிறிஸ்து என்ற விவாதத்திற்கு ஆதரவான மற்றும் எதிரான விவாதங்களைக் கலந்துரையாடவும்.*
5. *"ஏகாதிபத்தியம்" என்ற வார்த்தையின்மூலம் இந்தப் புத்தகத்தை எழுதியவர் எதனை அர்த்தப்படுத்துகின்றார்? (அடிக்குறிப்பை ஆராயவும்.)*
6. *சிவப்புக் குதிரை மற்றும் அதன்மீது சவாரி செய்தவர் என்பவற்றினால் குறிப்பிடப்படுவது எது?*
7. *கறுப்புக் குதிரை மற்றும் அதன்மீது சவாரி செய்தவர் என்பவற்றினால் குறிப்பிடப்படுவது எது?*
8. *ஒரு "பணம்" என்றால் என்ன? "ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை யென்றும்" என்ற கூற்றின் மறைவான கருத்து என்ன?*
9. *இதில் சித்தரிக்கப்பட்ட பணவீக்கத்தை நீங்கள் எப்போதாவது அனுபவித்து இருக்கின்றீர்களா? அல்லது இதை அனுபவித்துள்ள மற்றவர்களை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா? அதைப் பற்றிக் கூறுங்கள்.*
10. *மங்கின நிறமுள்ள குதிரை மற்றும் அதன்மீது சவாரி செய்தவர் என்பவற்றினால் குறிப்பிடப்படுவது எது?*
11. *மரணமும் பாதாளமும் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுகின்றன?*
12. *மரணம் மற்றும் பாதாளம் ஆகியவற்றினால் பயன்படுத்தப்பட்ட நான்கு முகமைகளைப் பற்றிக் கலந்துரையாடவும்.*
13. *எசேக்கியேல் 14:21ன் சந்தர்ப்பப் பொருளை வாசித்து, தேவனு டைய "எருசலேமுக்கு விரோதமான நான்கு கடுமையான தண்டனைகளை" விளக்கத் தயாராய் இருக்கவும்.*
14. *இந்தப் பாடத்தின்படி, நான்கு குதிரைவீரர்கள் பற்றிய தரிசனத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான வலியுறுத்தங்கள் யாவை?*
15. *இந்தப் பாடத்தின்படி, தேவன் முத்திரைகளைக் கட்டவிழ்த்தலுடன் இந்தப் பயங்கரத்தின் சித்தரிப்புகளைத் தொடங்கியது ஏன்? இதற்குச் சாத்தியக்கூறுள்ள மற்ற காரணங்களை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா?*

## இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்கள்

*பாவம் நிறைந்த மனிதன்*

(1) **வெற்றி** - ஏகாதிபத்தியத்தில் காணப்படுவதுபோல், மனிதனின் பேராசை வெற்றி பெறுதல் (மற்றவர்களின்மீது, விசேஷமாகக் கிறிஸ்தவர்களின்மீது வெற்றி பெற்றுள்ளதாகத் தோற்றம்).

(2) **கலகம்** - ஒன்றுமறியாத பலர் (விசேஷமாகக் கிறிஸ்தவர்கள்) கொலை செய்யப்படுதலுடன் இணைந்த யுத்தத்தின் வகை.

(3) **சோதனை** - கொலை செய்யப்படாதவர்கள்மீது (விசேஷமாகக் கிறிஸ்தவர்கள்மீது) பொருளாதாரச் சிரமங்கள்.

*பாவம் நிறைந்த உலகில்*

(4) **உபத்திரவம்** - உலகம் முழுவதும் அனுபவிக்கப்பட்ட துன்பம், இது (கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்கள் ஆகிய இருசாராருக்குமான) இயற்கைக்கு மாறான காரணங்களினால் ஏற்பட்ட மரணத்தில் உச்சக்காட்சியை அடைந்தது.

*கிறிஸ்தவர்கள் இரண்டு பங்கைப் பெறுவதுடன்*



**முதலாம் குதிரை வீரன் (6:1, 2)**



***இரண்டாவது குதிரை வீரன் (6:3, 4)***



மூன்றாவது குதிரை வீரன் *(6:5)*



நான்காவது குதிரை வீரன் (6:7, 8)